

சென்னை தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கனிமொழி தனசேகரன் தலைமையில் பகுதி கழக செயலாளர்கள் – மாமன்ற உறுப்பினர்கள் கே.கண்ணன், மு.இராசா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற தைத்திருநாள் பொங்கல் விழாவில் கலந்துகொண்டு, பொதுமக்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்புகளை கழக துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வழங்கினார். இதில் பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கை நிலைக்குழு தலைவர், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.கே.நகர் க.தனசேகரன், மாநில வர்த்தகர் அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம், மாநில இணைச் செயலாளர் குமரி விஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராசன் மாவட்ட துணை செயலாளர் பா.வாசுகிபாண்டியன், மாமன்ற உறுப்பினர்கள் ரத்னா லோகேஸ்வரன், ராணி ரவிச்சந்திரன், பகுதி நிர்வாகிகள் எஸ்.உமாபதி, எஸ். விஜயகுமார், பெ.தியாகு, து.ரஞ்சித்குமார் தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் அ.கதிரேசன், வழக்கறிஞர் கே.சதீஷ்கண்ணன், சோ.செந்தில்குமார், ஆர்.பழனிச்சாமி, வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எஸ்.மைக்கேல், மு.கோவிந்தராசன், வழக்கறிஞர் வீ.ஏ.ராஜா, எஸ்.பாஸ்கரன், தஞ்சை ஆர்.பாபு மாவட்ட பிரதிநிதிகள் டி.எஸ்.பி.தென்னரசு, த.முத்துமாரியப்பன், எஸ்.சண்முகம், மாவட்ட துணை அமைப்பாளர்கள் பி.டி.சி.பொன்னுரங்கம், பி.பாலமுருகன், என்.எஸ்.மணி, பகுதி அமைப்பாளர்கள் ஆர்.சுதாகரன், எஸ். சதீஷ்குமார், பா.சர்மா பகுதி துணை அமைப்பாளர் இ.ஆனந்த் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் கண்ட கனவு!

# காவேரி - குண்டாறு இணைப்பு நிச்சயம் நிறைவேற்றப்படும்!

## சட்டப்பேரவையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உறுதி!

**சென்னை. ஜன.11-**

**சட்டப்பேரவையில் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி காவேரி - குண்டாறு இணைப்பு குறித்து பேசினார். அப்போது நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறுக்கிட்டு காவேரி - குண்டாறு இணைப்பு எங்கள் தலைவர் கண்ட கனவு. நிச்சயம் இந்த அரசு நிறைவேற்றும் என்று உறுதிபட தெரிவித்தார்.**



இதுகுறித்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கூறியதாவது :-

அமைச்சர் துரைமுருகன்: காவேரி-குண்டாறு இணைப்பு என்பது, எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த அவையில் 3 திட்டங்களை ஒருசேர அறிவித்தார்கள். ஒன்று, தாமிரபரணி-கருமேனியாறு இணைப்புத் திட்டம். இரண்டாவது, தென் பெண்ணையாறு-செய்யாறு இணைப்புத் திட்டம். மூன்றாவது, காவேரி-குண்டாறு இணைப்புத் திட்டம். இந்த மூன்று திட்டங்களை 2009 ஆம் ஆண்டு தாமிரபரணி-கருமேனியாறு இணைப்பிற்கு நான் அடிக்கல் நாட்டினேன். பல ஆண்டுக் காலம் அது கிடப்பில் போடப்பட்டு. இருக்கிற இடம் தெரியாமல் போனதற்கு அப்புறம் இப்பொழுதுதான் அதை எடுத்து. நெருங்கக்கூடிய நிலைமைக்கு இப்போதுதான் அது வந்திருக்கிறது. அதேபோன்றுதான் காவேரி-குண்டாறு இணைப்பை நிச்சயம் நடத்த வேண்டுமென்பதற்காக, மாயனூரில் அதற்காக காவேரியில் ஒரு தடுப்பணையை 186 கோடி ரூபாயில் கட்டினோம். அதற்குப் பிறகு எங்கள் ஆட்சி போய்விட்டது. நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? இரண்டே இரண்டு tender விட்டிருக்கிறீர்கள். அதையும் ஒன்றாக விடவில்லை. இந்த மாவட்டத்தில் ஒரு tender. அந்த மாவட்டத்தில் ஒரு tender. இவர்களுக்கு ஒரு recommendation. அவர்களுக்கு ஒரு recommendation. அவர்கள் கூப்பிட்டார்களேதவிர, நின்றுபோய்விடுகிறது. ஆகையினால், காவேரி-குண்டாறு இணைப்பு என்பது, எங்கள் தலைவர் கலைஞர் கண்ட கனவு. நிச்சயம் இந்த அரசு நிறைவேற்றும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டார்.

### உயர் கல்வியின் எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையில் ஒன்றிய அரசு வெளியிட்ட வரைவு நெறிமுறைகளை எதிர்த்த

# இந்தியாவின் ஒற்றை முதல்வர் நமது தளபதி - கலைஞர் உருவில் மாநில உரிமைகளை கட்டிக் காக்கிறார்!

## சட்டப்பேரவையில் முதல்வரின் தனித்தீர்மானம் மீதான விவாதத்தில் – உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் முழக்கம்!

**சென்னை, ஜன.10-**

**சட்டப்பேரவையில் நேற்று, முன்தினம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானம் மீதான விவாதத்தில் உரையாற்றிய உயர் கல்வித்துறை அமைச்சர் - முனைவர் கோவி. செழியன், "உயர் கல்வியின் எதிர் காலத்தைப் பாழாக்கும் வகையில் ஒன்றிய அரசு வெளியிட்ட வரைவு நெறி முறைகளை எதிர்த்த இந்தியாவின் ஒற்றை முதல்வர் நமது தளபதி அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உருவில் மாநில உரிமைகளைக் கட்டிக் காக்கிறார்" என்று குறிப்பிட்டார்.**



சட்டப்பேரவையில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேசியதாவது:-

உயர் கல்வியையும், மருத்துவத்தையும் தனது இரு கண்களாகக் கொண்டு அதற்கான பல்வேறு சிறப்பான திட்டங்களை யாரும் சிந்திக்காத வண்ணம் நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். குறிப்பாக உயர் கல்வித் துறைக்கு முத்தான திட்டங்களான, 'புதுமைப் பெண்' திட்டம், 'தமிழ்ப் புதல்வன்' திட்டம், 'நான் முதல்வன்' திட்டம் போன்ற திட்டங்களை வழங்கி உயர் கல்வியை சிறப்படையச் செய்து வருகிறார். அதனால்தான் உயர் கல்வியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் உயர் கல்வியின் கட்டமைப்பையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் பாதிக்கும் வகையில் ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள வரைவு நெறிமுறைகளை எதிர்த்து, அதனைத் திரும்பப் பெற வேண்டுமென வலியுறுத்தி, இந்த அவையில் அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்த நமது முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியத் திருநாட்டில் பல மாநிலங்கள், பல பிரதேசங்கள், யூனியன் பிரதேசங்கள் இருந்தாலும், மாநில சுயாட்சி, மாநில உரிமைகளைக் கட்டிக் காப்பதில் தலைமகன்களாக இருக்கக் கூடிய தலைவர்கள் பேரறிஞர் அண்ணாவும், அன்புத் தலைவர் டாக்டர் கலைஞரும் ஆவர். அந்த இருக்கையை இன்று தக்க வைத்து, மாநில உரிமையைக் கட்டிக் காக்க தீர்மானம் கொண்டு வந்திருக்கிற இந்தியாவின் ஓர் ஒற்றை முதலமைச்சர் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்பது எல்லோரும் பாராட்டக்கூடிய செயல். அந்த வகையில், மாணவர்கள் சார்பாக முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்திற்கு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்களுக்கான துணை வேந்தர்கள் நியமனத்தில் தேர்வு செய்கிற தேர்வுக் குழுவில் இதுவரை 3 பேர் இருந்தனர். அதனைச் சீர் கெடுக்க, சர்வாதிகார போக்கோடு மாநிலங்களின் கருத்துகளைக் கேட்காமல், கலந்து பேசாமல் யு.ஜி.சி. சார்பில் 4வது உறுப்பினர் சேர்க்கப்பட வேண்டுமென்பது மாநில உரிமையைப் பறிப்பதாகும். அதனைத் திரும்பப் பெற கொண்டுவந்த இந்த அரசினர் தனித் தீர்மானத்தை பேராசிரியர்களும், கல்வியாளர்களும் வரவேற்கிறார்கள் என்பது இன்னும் மட்டற்ற மகிழ்ச்சி.

தமிழ்நாட்டை ஆண்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஏழை, எளிய மாணவர்களின் நலன் கருதி, உயர் கல்வியில் பொறியியல் படிப்பில் நுழைவுத் தேர்வை (Entrance Exam) ரத்து செய்தார்கள். அதனால் மாணவர்களின் நலன்காத்த மகத்தான தலைவர் கலைஞர். மீண்டும், உயர் கல்வியில் நுழைவுத் தேர்வு ஒன்றை ஒன்றிய அரசு திணிப்பது மாணவர்களின் நலனுக்கு எதிரானது என எண்ணி, அதனைத் தடுத்து நிறுத்த தீர்மானம் கொண்டுவந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர், முத்தமிழறிஞர் கலைஞர் இறக்கவில்லை, இறக்கவில்லை; இதோ இருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியின் உருவில் அவர்! மாநில உரிமையைக் கட்டிக்காப்பார் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற துணை நின்ற அனைத்து கட்சித் தலைவர்களுக்கும், சட்டமன்றக் குழுத் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவர் அவர்கள் இதற்காக வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். இது எதை உணர்த்துகிறது என்றால், BJP வெளிநடப்பு செய்வதன்மூலம் யு.ஜி.சி. ஒன்றிய பா.ஜ.க.வின் கைப்பாவை என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் இருக்கிறது.

மூத்த உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் நீதிமன்றத்தினுடைய வழக்கை விரைந்து நடத்த வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசின் சார்பில் வழக்கறிஞர்கள் குழு அமைத்து, விரைந்து வழக்கை நடத்தி, மாநில உரிமைகள் கட்டிக்காக்கப்படும் என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலைஞர் அவர்கள் கொண்டுவந்த திட்டம் சமச்சீர் கல்வித் திட்டம். அந்தத் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எல்லா உறுப்பினர்களும் சொன்னதைப் போல், மக்கள் போராட்டம், சட்டப் போராட்டம் நடத்தி முதலமைச்சர் அவர்கள் காக்க வேண்டும்; நாங்கள் துணை நிற்போம் என்று முன்வரிசையில் இருக்கிற தலைவர்கள் சொன்னார்கள்.

தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களே, கலைஞர் அவர்கள் கொண்டு வந்த சமச்சீர் கல்வித் திட்டம் தடை செய்யப்பட்டது. பின்னர், உச்சநீதிமன்றத்திற்குச் சென்று, தி.மு. கழகம் ஆட்சியில் இல்லாத போது, கோட்டையில் இல்லாதபோது, அதிகாரத்தில் இல்லாதபோது, ஆட்சி இல்லையென்றாலும் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு என்பது கலைஞர் அவர்கள் கொண்டுவந்த சமச்சீர் கல்விக்குத் துணை நின்றது என்பதை இந்தச் சபையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அந்த வகையில், முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை வரவேற்கிறேன். பா.ஜ.க. தீர்மானத்தை எதிர்த்து அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் பேசினார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பகுதிக் கழகச் செயலாளர் பேபி சேகர் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை ஆற்றி 2000 நபர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் தலைமை கழக பேச்சாளர் ஈரோடு இறைவன், ஜோதி, ஆவடி மாநகர மேயர் உதயகுமார் மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் மாவட்ட கழக நிர்வாகிகள் காயத்ரி ஸ்ரீதரன், தொழுவூர் பா. நரேஷ் குமார், பகுதி கழகச் செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், பொன் விஜயன், ஜி.நாராயண பிரசாந்த், மண்டல குழு தலைவர் அமுதா பேபி சேகர், பகுதி கழக நிர்வாகிகள் க.மு.ஜான், தீனதயாளன், முத்து, சுஜாதா, வெங்கடேசன், துரை ராஜ், எம்.விமல், டேனியல் உள்பட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### உள்நாட்டு சுற்றுலாவை தொடர்ந்து மேம்படுத்தும்!

# தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் - இரா.ராஜேந்திரன் துவக்கி வைத்தனர்!







குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். இராஜேந்திரன்ஆகியோர் நேற்று 10.01.2025 செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் கடற்கரை சாலையில் அமைந்துள்ள திருவிடந்தையில் 10வது தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாவினை துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்வின் போது சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தலைவர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர். சந்தர மோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஷூல்பா பிரபாகர் சதீஷ், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் சோழிங்கநல்லூர் சட்ட மன்ற உறுப்பிநர் ச.அரவிந்த் ரமேஷ், செங்கல்பட்டு மாவட்ட கூடுதல் ஆட்சியர் நாராயணா ஷர்மா , ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி. எஸ்.கவிதா ஆகியோர் உடன் இருந்தனர்.

சென்னை, ஜன.11-

குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.இராஜேந்திரன், ஆகியோர் நேற்று (10.01.2025) செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் கடற்கரை சாலையில் அமைந்துள்ள திருவிடந்தையில் 10வது தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாவினை துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வின் போது சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் தலைவர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் டாக்டர். சந்தர மோகன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

இதனை தொடர்ந்து தமிழ்நாடு சுற்றுலாத்துறை தனியார் பங்களிப்புடன் (Global Media Box) இணைந்து 10வது சர்வதேச பலூன் திருவிழா 2025 இனிதே துவங்கப்பெற்றது. கடந்த பத்து ஆண்டுகளில் தமிழ்நாடு சுற்றுலா நாட்காட்டியின் ஒரு அடித்தளமாக சர்வதேச பலூன் திருவிழா மாறி உள்ளது. இது இந்தியாவின் ஒரே வருடாந்திர ஹாட் ஏர் (வெப்ப காற்று) பலூன் திருவிழாவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 10வது தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாவை இந்த ஆண்டு கொண்டாடும் போது வானத்தில் வசீகரிக்கும் வண்ணங்கள் கொண்ட பலூன்கள் ஒரு அற்புதமான நிகழ்வாக இருக்கும்.

2015-ஆம் ஆண்டு துவங்கப்பட்ட இந்த சர்வதேச பலூன் திருவிழா மில்லியன் கணக்கான பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சியை தந்துள்ளது. 20க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து பிரம்மாண்டமான ஹாட் ஏர் பலூன்களை காட்சிப்படுத்தி உள்ளது.

2025 ஆம் ஆண்டு சர்வதேச பலூன் திருவிழா நடைபெறும் நாள் மற்றும் இடங்கள்:-

இந்த ஆண்டின் 10வது சர்வதேச பலூன் திருவிழாவினை முதல் முறையாக மூன்று நகரங்களில் ஒவ்வொன்றிலும் தனித்துவமான அனுபவங்களை பெரும்வகையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் வரும் நாட்களில்.

ஜனவரி 10 முதல் 12 ஆம் தேதி வரை சென்னை கிழக்கு கடற்கரை சாலை கோவளம் அருகே உள்ள திருவிடந்தையிலும்.

ஜனவரி 14 முதல் 16 ஆம் தேதி வரை பொள்ளாச்சி ஆச்சிப்பட்டி ரைட் கொங்குசிட்டியிலும்.

ஜனவரி 18 முதல் 19 ஆம் தேதி வரை மதுரையில் உள்ள கலைஞர் நூற்றாண்டு ஜல்லிக்கட்டு அரங்கத்திலும் நடைபெறும்.

10வது தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா 2025-ன் தனித்துவங்கள்:-

10வது சர்வதேச பலூன் திருவிழாவில் ஐரோப்பா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பிரேசில், பெல்ஜியம், ஜப்பான், தாய்லாந்து மற்றும் வியட்நாம் உட்பட 8-ற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 10-க்கும் மேற்பட்ட ஹாட் ஏர் பலூன்கள் சர்வதேச அளவில் பங்கேற்கின்றன.

*Baby Monster (Brazil), Hugo the Cheetah (Austria) Wes the Wolf* மற்றும் *Eli the Elephant (Uk)* போன்ற சிறந்த கண்கவர் வடிவங்களை கொண்ட ஹாட் ஏர் பலூன்கள் பார்வையாளர்களை வெகுவாக கவரும் வகையில் இடம்பெறுள்ளது.

சர்வதேச பலூன் திருவிழாவில் பங்கேற்கும் குழந்தைகள் மற்றும் குடும்பத்தினர் ஹாட் ஏர் பலூன்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளவும் மறக்க முடியாத புகைப்படங்களை எடுத்த மகிழ மினி பலூன் மாதிரிகள் உள்ளன.

ஹாட் ஏர் பலூன் பைலட்டிங்கில் ஆர்வமுள்ள பலூன் ஆப்ரேட்டர்கள் மூன்று நகரங்களில் உறுப்பினர்களாக பங்கேற்று எதிர்கால ஹாட் ஏர் பலூன் தொழில் வாய்ப்புகள் பற்றி அறிந்து கொள்ளலாம்.

ஹாட் ஏர் பலூன்களின் செயல்பாடுகள் அமைதியான காற்று மற்றும் வானிலை காரணங்களுக்கு உட்பட்டது. சான்றிளிக்கப்பட்ட விமானிகளால் இறுதி முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

உள்நாட்டு சுற்றுலாவினை ஊக்கப்படுத்துதல்:-

தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழா கலாச்சாரம், சாகசம் மற்றும் உலகாளவிய சுற்றுலா ஆகியவற்றின் கொண்டாட்டம் ஆகும். உலகெங்கிலும் உள்ள ஹாட் ஏர் பலூன் திருவிழாக்கள் பெரும் பார்வையாளர்களை ஈர்க்கின்றன. மேலும் தமிழ்நாடு சர்வதேச பலூன் திருவிழாஉள்நாட்டுசுற்றுலாவை தொடர்ந்து மேம்படுத்துகிறது. நாடு முழுவதும் மற்றும் அதற்கு அப்பால் உள்ள பார்வையாளர்களையும் ஈர்க்கிறது.

ஹாட் ஏர் பலூன்கள் விமானம் என வகைப்படுத்தப்பட்டு கடுமையான சிவில் விமானப் போக்குவரத்து விதிகள் மற்றும் விதிமுறைகளின் கீழ் செயல்படும் ஒவ்வொரு நாளும் பலூன்கள் இயக்கப்படுவது அப்பகுதியில் நிலவும் வானிலை நிலைமைகளின் அடிப்படையில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. ஹாட் ஏர் பலூன் திருவிழாக்கள் முற்றிலும் இயற்கை கால நிலையினை சார்ந்திருக்கும். அமைதியான காற்று மற்றும் சாதகமான வானிலை ஆகியவை பாதுகாப்பான நடவடிக்கைகளுக்கு முக்கியமானவை. மேலும் விமானம் மற்றும் டெதரிங் தொடர்பான அனைத்து முடிவுகளும் சான்றிளிக்கப்பட்ட விமானிகளால் எடுக்கப்படுகின்றன. மேலும் பாதுகாப்பு மற்றும் டெதரிங் உறுதிப்படுத்துவதில் அவர்களின் தீர்ப்பே இறுதியானது.

மேலும் பலூன் திருவிழாவினை பற்றிய கூடுதல் விவரங்களுக்கு www.tnibf என்ற இணையதள முகவரியை காணவும்.

இந்நிகழ்ச்சியில் சோழிங்கநல்லூர் சட்ட மன்ற உறுபினர் ச.அரவிந்த் ரமேஷ், செங்கல்பட்டு மாவட்ட கூடுதல் ஆட்சியர் நாராயண ஷர்மா, ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் எஸ்.எல்.ஆர்.இதயவர்மன் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி எஸ். கவிதா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வட்டக் கழகச் செயலாளர் க.பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் பெரம்பூர்

# 36 (அ) வட்ட தி.மு.க. சார்பில் 500 நபர்களுக்கு பொங்கல் தொகுப்பு!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - கலாநிதி வீராசாமி எம்.பி. வழங்குகின்றனர்!

சென்னை, ஜன. 11 -

சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 36 (அ) வட்ட தி.மு.க. சார்பில் தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா முன்னிட்டு 500 நபர்களுக்கு எவர்சில்வர் பொங்கல் பானை, அரிசி, வெல்லம், கரும்பு உள்ளிட்ட பொங்கல் தொகுப்பு வழங்கும் விழா நாளை (12.1.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, எம்.கே.பி. நகர், 18 வது மேற்கு குறுக்கு தெருவில் நடைபெறுகிறது.

36 (அ) வட்டக் கழகச் செயலாளர் க.பாபு தலைமை வகித்து நிகழ்ச்சி ஏற்பாட்டினை செய்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன் மற்றும் இரா. நரேந்திரன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், ஏ.ஆர். ஆர்.மலைச்சாமி எம்.சி, ந.சர்பஜெயதாஸ் எம்.சி, சி.ஆனந்தி எம்.சி, த.ஆறுமுகம், ஆர்.எஸ்.மனோகரன், ஜி.மாரிமுத்து, கே.தினகரன், வி.முருகன், இரா.அரிதாஸ், சி.எஸ்.ரவி, என்.கார்த்திபன், கே.வி.ராஜன், எம்.உமாபதி, கே.இ.செந்தமிழரசு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வடசென்னை நாடாளு மன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்து கொண்டு பொங்கல் தொகுப்பினை வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பகுதிக் கழக, அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், பாக முகவர்கள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.